வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

## ஆண்டு 9 (உயர் தரம் - நக்கீரர்)

## மாதிரி வினாக்கள்

Quiz Sample Questions 2019 - Year 9

1. அவுஸ்திரேலியாவில் தமிழர்கள்

அதிகமாக வாழும் மாநிலம் எது?

**விடை:**

**நியூ சவுத் வேல்ஸ்**

2. வானவில்லில் உள்ள ஏழு நிறங்களும் எவை?

**<u>விடை:</u>**

# ஊதா, கருநீலம், நீலம், பச்சை,

# மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு.

3. மதுரையில் தமிழரின் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்கும் ஒரு கட்டடத்தின் பெயர் என்ன?

**<u>விடை:</u>**

# மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

4. சூரியன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக?

**<u>விடை:</u>**

# கதிரவன், ஞாயிறு

# (பகலவன், கதிரோன்,

# வெய்யோன், பரிதி)

5. “யாதும் ஊரே யாவரும் கேளிர்”

இதன் பொருள் என்ன?

**விடை:**

# எல்லா ஊரும் எமது ஊர்

# எல்லோரும் எமது உறவினர்

6. தமிழர் பண்பாடுகள் இரண்டினைக் கூறுக?

விடை:

தாய் தந்தையரைப் பேணுதல்

வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்

(பிறருக்கு உதவுதல்,

பெற்றோர்களையும், பெரியோரையும், ஆசிரியர்களையும் மதித்தல்)

7. இராமாயணத்தை முதலில் தமிழில் மொழிபெயர்த்து எழுதியவர் யார்?

**விடை:**

# கம்பர்

8. பின்வரும் தொடரை நிறைவு செய்க:

இளமையிற் கல்வி ………… …………..

**விடை:**

சிலையில் எழுத்து.

9. ஐவகை நிலங்களும் எவை?

**விடை:**

# குறிஞ்சி

# முல்லை

# மருதம்

# நெய்தல்

# பாலை

10. புலம் பெயர் தமிழர் என்பதில் புலம் என்றால் என்ன?

**<u>விடை:</u>**

**பாரம்பரியமாக வாழ்ந்த நிலம்**

**அல்லது தாய்மண்.**

11. இந்தியாவில் காவேரி (காவிரி) ஆற்றுக்குக் குறுக்கே ‘கல்லணை’ என்று சொல்லப்படும் கற்களால் ஆன அணையைக் கட்டுவித்த மன்னன் யார்?

**<u>விடை:</u>**

# கரிகாற் சோழன் (கரிகாலன்)

12. ஈழத்திலே தமிழர்களின் உரிமைக்காக உண்ணா விரதம் (நோன்பு) இருந்து இருவர் உயிர்த்தியாகம் செய்தனர். அவர்களில் ஒருவரின் பெயரைக் கூறுக?

**விடை:**

# திலீபன் / பார்த்தீபன்

# (அன்னை பூபதி / பூபதி )

13. பின்வரும் சொற்களைச் சேர்த்துக் கூறுக?

வெண்மை + தாமரை

**விடை:**

# வெண்டாமரை

**14. இது என்ன?**



**<u>விடை:</u>**

**மேளம்**

**(தவில்)**

15. தமிழர் கிராமிய நடனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

**<u>விடை:</u>**

**கரகம்**

**காவடி**

**(கும்மி, கோலாட்டம், மயிலாட்டம்)**

16. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழியவே.

இங்கு இசை என்பதன் பொருள் என்ன?

1. தமிழிசை
2. புகழ்
3. இன்பம்

**<u>விடை:</u>**

2. புகழ்

17. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை இயற்றியவர்?

**<u>விடை:</u>**

# சீத்தலைச் சாத்தனார்

# (சாத்தனார்)

18. இது யாருடைய சிலை?



**விடை:**

# திருவள்ளுவர்

19. நிகழ்ச்சி ஒன்றை முதன்முதலில் மேடையேற்றுவதை எப்படி அழைப்பார்கள்?

1. அரங்கேற்றம்
2. ஒத்திகை
3. நிகழ்ச்சி

**விடை:**

1. அரங்கேற்றம்

20. சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி
குண்டலகேசி

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று இங்கு இல்லை.

அதன் பெயரைக் கூறுக?

**விடை:**

**சீவகசிந்தாமணி**

21. தமிழில் எத்தனை உயிர் மெய் எழுத்துகள் உள்ளன?

**விடை:**

216

(12 x 18 = 216)

(இருநூற்றிப் பதினாறு)

22. தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்கள் அல்லது குறில்கள் எவை?

**விடை:**

**அ , இ , உ , எ , ஒ**

23. ‘அவை’ என்ற சொல்லின்

ஒருமை வடிவம் எது?

**<u>விடை:</u>**

**அது**

24. சுட்டெழுத்துக்கள் மூன்றும் எவை?

**விடை:**

**அ - இ - உ**

**(அவன் - இவன் - உவன்)**

25. திருக்குறளின் மூன்று பாகங்கள்

(மூன்று பால்கள்) எவை?

**<u>விடை:</u>**

அறம்

பொருள்

இன்பம் (காமத்துப் பால்)